தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 13, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 ஏப்ரல் 26, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்."

தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவன் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகிற தூணாவான்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 172, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

173—

நகராட்சியுடன் இணைத்தல்

***16044—திரு. சி. மகேந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், போடிபட்டி ஊராட்சியை உடுமலைப்பேட்டை நகராட்சியுடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2022 ஏப்ரல் 26*

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சி எல்லைகளை விரிவாக்கம் செய்வது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள்.*

திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலை ஊராட்சி ஒன்றியத்திலே 38 ஊராட்சிகள் உள்ளன. அதில் 35 ஊராட்சிகள் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டவை. 3 ஊராட்சிகள் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்டவை. இந்த 38 ஊராட்சிகளும் உடுமலைப்பேட்டை நகராட்சியை மையமாகக் கொண்டு இருக்கின்றன. உடுமலைப்பேட்டை நகராட்சி, 1984 ஆம் ஆண்டு தேர்வுநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சி கொறடா திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களால் கொண்டுவரப்பட்ட இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 24X7, 24 மணி நேரமும் தண்ணீர் வசதியும், பாதாளச் சாக்கடைத் திட்டமும் கொண்டுவரப்பட்டு சுத்தமான நகரமாக உள்ளது. இத்தனை சிறப்புகள் பெற்ற உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு அருகிலுள்ள எனது மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கணக்கம்பாளையம், கோடிபட்டி, ராகல்வாவி, பூலாங்கிணறு, கணபதிபாளையம் ஊராட்சிகள் மற்றும் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியகோட்டை, சின்னவீரப்பம்பட்டி, குறுஞ்சேரி ஆகிய ஊராட்சிகளை இணைத்து உடுமலைப்பேட்டை நகராட்சியை விரிவுபடுத்தி மாநகராட்சியாக உருவாக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அவர்கள் அறிவித்தார்கள் என்றால், (குறுக்கீடு) இல்லை, இல்லை, உடுமலை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தலைப் பொறுத்தவரையில் ஊரகப் பகுதிகளில் தேர்தல் முன்பே நடைபெற்று ஆங்காங்கே தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். இப்போது நடைபெற்ற நகராட்சிப் பகுதிகளுக்கான தேர்தலில் எந்தெந்தப் பகுதிகள் மாநகராட்சிக்குப் பக்கத்திலே, நகராட்சிக்குப் பக்கத்திலே இருக்கின்றனவோ, அவற்றை மாநகராட்சியுடன் இணைப்பது என்பது ஒரே துறை என்பதால் சாத்தியமாக இருந்தது. இப்பொழுது அருகில் இருக்கின்ற ஊராட்சிகளை இணைக்கும்போது அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பதவிக் காலம் முடிகிறபோதுதான் அவற்றை இணைக்க முடியும். நகராட்சியாகவோ அல்லது மாநகராட்சியாக விரிவுபடுத்துவதோ அவர்களுடைய பதவிக் காலம் முடியும் வரை காத்திருந்துதான் செய்யமுடியும். ஒவ்வொரு நகராட்சியைச் சுற்றிலும் இருக்கின்ற ஊரகப் பகுதி மக்கள் நகராட்சியில் இருக்கிற எல்லா வசதி வாய்ப்புகளையும் விரும்புகிறார்கள். குறிப்பாக குடிதண்ணீர், பாதாள சாக்கடைத் திட்டம், கழிவறை வசதிகள், இப்படி அனைத்து வசதிகளையும் விரும்புகின்ற காரணத்தால், ஊரக உள்ளாட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பதவிக் காலம் முடிகிறபோது அதைப்பற்றி சிந்தித்து முடிவெடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், அது புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோன்று மடத்துக்குளம் தாலுகாவும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. மடத்துக்குளம் தொகுதியில் 5 பேரூராட்சிகள் உள்ளன. தொகுதியின் தலைமையிடமாக மடத்துக்குளம் பேரூராட்சி செயல்பட்டுவருகிறது. மடத்துக்குளம் பேரூராட்சி மற்றும் அதன் அருகிலுள்ள ஊராட்சிகளை இணைத்து பேரூராட்சியை விரிவுபடுத்தி, மடத்துக்குளம் பேரூராட்சியை நகராட்சியாக உருவாக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே நான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை நினைவுபடுத்தி, ஊரக உள்ளாட்சித் தலைவர்களின் பதவிக் காலம் முடிவடைகிறபோது, மக்களுடைய நலன் கருதி பெரிய நகராட்சியாக உருவாவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.

முற்பகல் 10–05

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதிக்குட்பட்ட கருமாண்டிசெல்லிபாளையம் மற்றும் பெருந்துறை பேரூராட்சிகள், ஈரோடு, சேலம், திருப்பூர், கோவை ஆகிய பகுதிகளுக்கிடையில் வளர்ந்து வரக்கூடிய பேரூராட்சிகளாகும். இந்த இரண்டு பேருராட்சிகளிலும் சுமார் 60,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையே, ஈரோட்டிலிருந்து குன்னத்தூர் செல்வதற்கு ஒரே ஒரு குறுக்கு சாலை மட்டும்தான் உள்ளது. 18 வார்டுகள் கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சியிலும், 15 வார்டுகள் பெருந்துறை பேரூராட்சியிலும் உள்ளன. எனவே, இதை பெருந்துறை நகராட்சியாக மாற்றித் தர இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற்ற மாநகராட்சி மற்றும் நகராட்சித் தேர்தலில், அருகில் இருக்கின்ற பகுதிகளை இணைத்து பல இடங்களில் மாநகராட்சிகளையும், நகராட்சிகளையும் விரிவுபடுத்தியிருக்கிறோம். தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதி 60,000 மக்கள் தொகையைக் கொண்டிருப்பதால், அதை இணைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கலாம். ஆனால், தற்போதுதான் தேர்தல் நடைபெற்று,

2022 ஏப்ரல் 26]

தலைவர்கள் பொறுப்புக்கு வந்திருக்கிறார்கள். அதன் period *முடிகிற காலத்தில்தான் அதைச் செய்ய முடியும். எனவே, அவ்வாறு முடிகிற காலத்தில், அதை அருகிலுள்ள பகுதிகளுடன் இணைத்து, ஒரு பெரிய நகராட்சியாக உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன்* K. *அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை–சத்தியமங்கலம் ரோடு விரிவாக்கத்திற்காக 2020 ஆம் ஆண்டு 38 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்றோடு 2 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரை நில எடுப்புக்கான எந்தப் பணியும் செய்யப்படவில்லை. நேற்றையதினம்கூட, நான் கமிஷனர் அவர்களிடம் இதுகுறித்து கேட்டபோது, வருவாய்த் துறை மூலமாக வர வேண்டும் என்று சொல்கிறார். வருவாய்த் துறையினரிடம் கேட்டால், நெடுஞ்சாலைத் துறையின்மூலம் வர வேண்டும் என்கிறார்கள். முக்கடலும் சந்திப்பது போன்று சம்பந்தப்பட்ட மூன்று துறைகளினுடைய அமைச்சர்களும் சேர்ந்து, கோவை–சத்தியமங்கலம் சாலை விரிவாக்கத்தை தயவுசெய்து உடனே செய்து கொடுக்க வேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம் கேள்வி கேட்டிருக்கிறீர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *அந்தத் துறைக்குத்தான்* LPA–*விலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல மாநகராட்சிகளில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் போகின்றன, தேசிய நெடுஞ்சாலைக்குச் சொந்தமான சாலைகளும் போகின்றன. அந்தந்தப் பணியை அவரவர்கள்தான் செய்ய முடியும். எனவே, நீங்கள் சொல்கிற சாலை மாநகராட்சி சாலையா?* (குறுக்கீடு) *அதைப் பற்றி ஆய்வு செய்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அதைப் பற்றி நீங்கள் தனியாகக் கேளுங்கள், உட்காருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

174—

காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை

***21221—திரு. பூண்டி கே. கலைவாணன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதியில் வைக்கோலை மூலப்பொருளாகப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதியில் வைக்கோல்மூலம் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.*

திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள், விளையாட்டு மைதானம் அமைக்க திருவாரூர் மாவட்டத்திற்கு வாய்ப்பு வழங்கியமைக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 10 தொகுதிக்கு என்று பொதுவாகத்தானே சொன்னார்கள்.*

திரு. பூண்டி கே. கலைவாணன்: *திருவாரூருக்குக் கேட்டிருக்கிறேன்.*